# சமாதானத்துக்கும் ஜனநாயகயமாக்கலுக்குமான ஒரு வேண்டுகோள்

முதற்கண் இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்காக உருவாகியுள்ள இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்திற்கு எமது முழுமையான ஆதாவை தெரிவித்துக்கொள்கிறேம். இச்சமாதானப் பாதையில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட அரசியல் செயற்பாட்டாளர்களின் மனஉறுதியையும் நாம் வரவேற்கின்றோம். அதேவேளை சமாதான முன்னெடுப்பில் பங்குகொள்ளும் பொருட்டு தமது தலைவர்களுக்கு பல்வேறு வழிகளிலும் அழுத்தங்களையும் ஊக்கத்தையும் வழங்கிய இலங்கை எங்கும் பரந்து வாழ்கின்ற பொதுமக்களின் அரசியல் மனஉறுதியை நாம் மனதார பாராட்டுகின்றோம். அவ்வுணர்வின் அடிப்படையிலேயே நாமும், இச்சமாதான முன்னெடுப்பானது பரந்துபட்ட ஜனநாயக விழுமியங்கள், மற்றும் மனித உரிமைகளை மதிக்கும் நோக்கிலானதாகவும், மேலும் அவற்றினால் வழிநடத்தப்படுவதாகவும் இருக்கவேண்டும் என்று வலியுறுத்தி நிற்கின்ற இலங்கையின் சிவில் சமூகத்தில் உள்ள சகல சக்திகளோடும் சேர்ந்து குரல்கொடுக்க விரும்புகின்றோம்.

சமாதான முன்னெடுப்புக்கள் பற்றிய பூரிப்பான இச்சூழல் பலரை மனித உரிமைகள் தொடர்பாக பாராமுகமாக இருந்துவிடத்தூண்டும். அந்நிலயையானது ஆயுதப் பிணக்கில் ஈடுபட்டோரில் ஒருசாரார் இவ்யுத்த நிறுத்தச் சூழலைப் பயன்படுத்திக் கொண்டு மாற்றுக் கருத்துக் கொண்டோரைத் தாக்குவதற்கும் மாற்றுக் கருத்துக்களையே இல்லாதொழிக்கவும் முயல்வர். உண்மையிலேயே, இவ் ஆயுதப் பிணக்கில் ஈடுபட்டுள்ள பிரதான தரப்பினர்களால் தொடர்ந்தும் நடத்தப்பட்டுவரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அக்கறையோடு அவதானித்து, அவற்றை வெளிப்படுத்தும் மனித உரிமை அமைப்புக்களை, சமாதான முன்னெடுப்புகளுக்களின் ஸ்திரமற்ற தன்மையை காரணம்காட்டி கண்டிக்கும் போக்கு அண்மைக் காலாமாக காணப்படுகின்றது.

அந்த வகையில் இத்தகைய ஸ்திரமற்ற சமாதான முன்னெடுப்புக்களின் போது தான் குறிப்பாக மாற்றுக் கருத்துக்களுக்கான இடைவெளியையும், சிவில் சமூகத்தின் பரந்துபட்ட பங்கேற்றலையும் உறுதிசெய்யும் பொருட்டு, சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடும் பிரதானமான தரப்பினர்களை ஜனநாய அடிப்படையில் கேள்விக்குட்படுத்தக்கூடிய நிலைமையை உருவாக்க அனைவரும் முயலவேண்டும் என்பதற்காகவே இவ்வேண்டுகோளை விடுக்கிறோம். இக்கண்காணிப்பானது மிக அத்தியாவசியமானது, ஏனெனில் குறிப்பாக சமாதான முன்னெடுப்புக்கள் துரதிஷ்டவசமாக சீர்குலைந்து விட்டாலும் அது ஜனநாயக மயப்படுத்தலுக்கான செயற்பாடுகளையும் தோற்கடித்து விடாமல் இருப்பதை நாம் உறுதிசெய்ய வேண்டும். எனவே இச்சமாதான முன்னெடுப்பின் தாக்கமானது இறுதியில் சமாதானம் என்ற பெயரில் தொடர்ந்தும் மாற்றுக் கருத்துக்கள் எல்லாம் நசுக்கப்பட்ட, வலுவிழந்த ஒரு மக்கட்சமூகத்தை உருவாக்குவதாகவே இருக்குமாயின், அது மிகவும் துர்ப்பாக்கியமான விடயமாக அமையும்.

மாறாக, இச்சமாதான முன்னெடுப்பின் போது வெளிப்படையான கருத்துப்பரிமாற்றம் நடைபெறுமானால், சம்பிரதாயபூர்வமான ஒரு உடன்படிக்கை ஏற்படாவிட்டாலும்கூட, இப்பரந்துபட்ட கருத்துப்பரிமாற்றத்திற்கூடாக ஒரு புதிய புரிந்துணர்வு நிலையை நோக்கி சமுகமானது நகரக்கூடியதாகவாவது அமையும். சமாதானத்தை நோக்கிய முன்னெடுப்பானது எப்போதும் படிப்படியானதோர் நகர்வுப் போக்காகும். அதனுள் ஓர் பரந்துபட்ட கருத்துப் பரிமாற்றத்தையும், விவாதத்தையும் ஊக்குவிப்பதன் மூலம் ஜனநாயக முன்னெடுப்புகளுடன் இணைந்து எடுத்து வைக்கப்படும் ஒவ்வொரு அடியும் ஒரு நீண்ட கால இலக்கையுடைய, உறுதியாக நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்தை நோக்கிய பாதையின் ஆரம்ப அடிகளாகவே அமையுமென்பது உறுதி.

நோர்வே அரசின் மத்தியஸ்துவம் என்பது பேச்சுவார்த்தையில் ஈடுபடவிருக்கும் இரு அணிகளான இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளுக்கான வழிமுறைகளைப்பற்றியும் கணக்கிலெடுக்கும் என்பதை நாம் அறிவோம். இருந்தபோதிலும் சமாதான முன்னெடுப்பானது பேச்சுவார்த்தை-மேசைக்கு அப்பாலும் சென்று பொதுமக்களின் அன்றாட சிவில் வாழ்க்கையுடன் தொடர்புபட்ட தொன்றாக கணிக்கப்படவேண்டும் என்பதை நாம் இங்கு வலியுறுத்த விரும்புகிறோம். தற்போது இது முக்கியமாக, பொருளாதாரத் தடைநீக்கம், சோதனைச் சாவடிகள் நீக்கம் என்ற அளவிலேயே அர்த்தப்படுத்தப் படுகின்றது. இவை சாதாரண மக்களின் வாழ்நிலையில் குறிப்பாக மாற்றங்களை ஏற்படுத்தும், அவ்வகையில் இவை மேலும் ஊக்குவிக்கப்பட்டு பலப்படுத்தப்பட வேண்டும்.

அதேவேளை நாம் "சுமூகமான சூழலின்" உருவாக்கம் என்பதை ஒரு அரசியல் செயல் முன்னெடுப்பாகவே நோக்குகின்றோம். அது இராணுவமயப்பட்ட அரசியல் ஸ்தாபனங்களை அத்தன்மையிலிருந்து மீட்பதன் மூலம், ஜனநாயகமயப்பட்ட அரசியல் கலாசாரத்தையும் மற்றும் மனித உரிமை விழுமியங்களையும் மேம்படுத்துவதை நோக்கி எம்மை நகர்த்த வேண்டும் என்றே நாம் கருதுகின்றோம்.

சமாதான முன்னெடுப்பின் நியாயாதிக்கம் என்பது மோதல் தவிர்ப்புச் செயற்பாட்டில் மட்டுமல்லாது பரந்த ஜனநாயக அடிப்படையிலான கேள்விக்குட்படுத்தல் போன்ற பரந்த விடயங்களிலும் தங்கியுள்ளது. சமாதான முன்னெடுப்புக்களில் ஈடுபடுவோர் பற்றி விமர்சனங்களைக் கொண்டவையாயிருப்பினும் கூட பரந்த பல்வேறு கருத்துக்கள் வெளிப்படுவதற்கான இடைவெளி திறந்துவிடப்படவேண்டும். அப்போது தான் சமாதான முன்னெடுப்புக்களின் நியாயபூர்வத் தன்மை பலப்படுத்தப்படுகின்ற அதேவேளை அதன் போக்கை மேலும் செழுமைப்படுத்தவும் முடியும். இந்நிலைப்பாட்டிலிருந்தே இச்சமாதான உடன்படிக்கை நிலைத்து நிற்பதற்கு மாற்றுக் கருத்துக்களுக்கு இடமளிப்பது என்பது எவ்வளவு முக்கியமானது என்பதை எமது இவ்வேண்டுகோள் கோடிட்டுக் காட்டுகிறது. அத்துடன் கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஏனைய விடயங்களுள், இலங்கை அரசாங்கத்தினாலும் புலிகளினாலும் பிரதிநிதித்துவப்படுத்தப் படாத சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளைக் கவனத்திலெடுக்கின்ற விடயத்தில் மிக காத்திரமான பரந்துபட்ட மக்கள் விவாதம் என்பது மிகப் பயனுள்ளதாக அமையும்.

நோர்வே அனுசரனையாளர்கள் மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கு ஓர் அடிப்படையான கண்காணிப்பு செயற்பாட்டை நிறுவவேண்டும் என நாம் வலியுறுத்த விரும்புகின்றோம். அவ்வாறானதோர் நடவடிக்கையானது பிரதான இரு சாராரும் ஜனநாயகம் மற்றும் மனித உரிமை தொடர்பான விடயங்களில் பொறுப்புச் சொல்லுபவர்களாய் இருக்கிறார்களா என்பதை அரச சார்பற்ற நிறுவனங்கள், ஊடகத் துறை மற்றும் சிவில் அமைப்புக்கள் அவதானிப்பதற்கு ஒத்தாசை வழங்குவதாக அமையும். இலங்கை அரசாங்கமும் புலிகள் அமைப்பும் மாற்றுக் கருத்துக்களுக்கான இடைவெளியைப் பாதுகாக்கவேண்டும் என்றும், மற்றும் சமாதான முன்னெடுப்புக்களில் அவர்களுக்கான பங்குபற்றலை உறுதி செய்கின்ற வகையில் தமது செயற்பாடுகளை ஜனநாயக கோட்பாடுகளின் அடிப்படையில் வெளிக்கொணர வேண்டு மென்றும் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இறுதியாக, இலங்கை அரசாங்கத்தினதும் புலிகளினதும் செயற்பாடுகளை துணிச்சலுடன் ஓர் சுதந்திரமான நிலைப்பாட்டில் நின்று கண்காணிக்கும் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு எமது புரண ஆதரவை தெரிவித்துக்கொள்கினறோம்.

கையொப்பமிட்டோர் பட்டியல்:

1. Archbishop Desmond Tutu, South Africa.
2. Lord Eric Avebury, Chair of the Parliamentary Human Rights Group, House of Lords, United Kingdom.
3. Dr. Arun Gandhi, Founder Director, M.K. Gandhi Institute, Christian Brothers University, Memphis TN, USA.
4. Dr. Ursula M. Franklin C.C. FRSC, University Professor Emeritus, Massey College, University of Toronto, Toronto, Canada.
5. Prof. Henry Steiner, Human Rights Program, Harvard Law School, Cambridge, MA, USA.
6. Dr. A. Sivanandan, Director, Institute of Race Relations, UK.
7. Prof. S. J. Tambiah, Department of Anthropology, Harvard University, Cambridge, MA, USA.
8. Dr. Hanna Newcombe, Director, Peace Research Institute, Dundas, Ontario, Canada.
9. Prof. Gananath Obeyesekere, Princeton University, Princeton, NJ, USA.
10. Dr. Metta Spencer, Emeritus Professor of Sociology, University of Toronto, Toronto, Canada.
11. Prof. David Little, Dunphy Professor in Religion, Ethnicity, and International Conflict, Divinity school, Harvard University, Cambridge, MA, USA.
12. Prof. Richard Gombrich, Boden Professor of Sanskrit, University of Oxford, UK.
13. Prof. Robert Perinbanayagam, Hunter College, New York, NY, USA.
14. Dr. Vasuki Nesiah, Senior Associate, International Center for Transitional Justice, New York, NY, USA.
15. Gary Purdy, University Professor and Director, McMaster University Center for Peace Studies, Hamilton, Ontario, Canada.
16. Prof. Robert Rotberg, Program on Intrastate Conflict and Conflict Resolution, Harvard University, Cambridge, MA, USA.
17. Prof. H. L. Seniviratne, University of Virginia, USA.
18. Prof. Jonathan Spencer, University of Edinburgh, UK
19. Elisabeth Boetzkes, Director, Women's Studies Program, McMaster University, Hamilton, Ontario, Canada.
20. Hilary Charlesworth, Director of the Center for International and Public Law, Australian National University, Australia.
21. Dr. S. Nanthikesan, Harvard University, Cambridge, MA., USA.
22. Prof. A. Kumar David, Hong Kong Polytechnic University, China.
23. Prof. Valentine Daniel, Columbia University, New York, NY, USA.
24. Clarence Dias, President, International Center for Law And Development, New York, NY, USA
25. Prof. Maya Chadda, Council on Foreign Relations, USA.
26. Prof. Guenter Frankenberg, University of Frankfurt, Germany.
27. Rev. Janet Garvey Stangvik, Napa Valley Center for Spiritual Living, Napa Valley, California, USA.
28. Prof. Anthony Anghie, University of Utah School of Law, Salt Lake City, Utah.

29. Prof. Malathi De Alwis, Visiting Professor, New School University, New York, NY, USA.
30. Prof. Quadri Ismail, University of Minnesota, USA.
31. Prof. Pradeep Jeganthan, University of Minnesota, USA.
32. Dr. Kashyapa Yapa, Director, Ozogoche Irrigation Project, Committee for Local Development, Guamote, Chimborazo, Ecuador.
33. Prof. N. Shanmugaratnam, Professor of Development Studies, Agricultural University of Norway, Norway.
34. Ahilan Kadirgmar, New School University, New York, USA.
35. Prof. Yosuke Yotoriyama, Niigata University, Japan.
36. Prof. Richard Young, Princeton Theological Seminary, Princeton, NJ, USA.
37. Dr. Therese Onderdenwijngaard, Free University Amsterdam, The Netherlands.
38. Prof. Fabienne Peter, University of Basel, Basel, Switzerland.
39. Rakesh Rajani, Executive Director, HakiElimu, Tanzania.
40. Dr. Dharini Rajasingham, International Center for Advanced Studies, New York University, NY, USA.
41. Ratna Kapur, Director, Center for Feminist Legal Research, Delhi, India.
42. Dr. Celestine Nyamu-Musembi,. Institute of Development Studies, University of Sussex, UK.
43. Dr. Chandra Lekha Sriram, International Peace Academy, USA
44. Sharmini Fernando, Center for Refugee Studies, York University, Hamilton, Canada.
45. Wenzhuo Hou, Migrant Worker Program, Beijing, China.
46. Ameena Hussein, Writer, Geneva, Switzerland.
47. Sangeetha Nesiah, Creekside Education Trust, UK.
48. Dilshika Jayamaha, Journalist, New York, NY, USA.
49. Kevin Shimmin, Union Representative, UFCW Canada, Locals 175 and 633, Canada.
50. Ceylon Mooney, Board member, Mid-South Peace and Justice Center, USA.
51. Mithran Tiruchelvam, Independent Scholar, New York, NY, USA.
52. Sara Zucker, Director, Project on Justice in Times of Transition, Harvard University, USA.
53. Aaron Moore, Cornell University, Ithaca, New York, USA.
54. Benoit Pasquereau, Marconi, UK.
55. Blake-Burr-McNeal, University of Memphis, USA.
56. Christopher Pollmann, Noel Fellow at European Union Center, Harvard University, Cambridge, MA., USA and Metz University, France.
57. Cynthia Milton, Coordinator, Legacies of Authoritarianism Research Circle, University of Wisconsin-Madison, USA.
58. Darshan Ambalavanar, Department of Religion, Harvard University, Cambridge, USA.
59. Dr. Anna Doney, Clinical Psychologist, Cambridge, UK.
60. Dr. Anne M. Blackburn, University of South Carolina, USA.
61. Dr. Donald Woodside, Faculty of Health Science, McMaster University, Hamilton, Ontario, Canada

62. Dr. Richard J Preston, Professor Emeritus, McMaster University, Hamilton, Ont., Canada.
63. Dr. Alan Keenan, Solomon Asch Center for Study of Ethno-political Conflict, University of Pennsylvania, USA.
64. Dr. David Dickson, Assistant Director, IMBA Program University of Memphis, Memphis, USA.
65. Dr. Derek Paul, Professor Emeritus, University of Toronto, Toronto, Canada.
66. Dr. Elizabeth J Harris, Honorary Lecturer, Birmingham University, UK.
67. Dr. Frederick Knight, Carter G. Woodson Institute, University of Virginia, USA.
68. Dr. Gordon McCline, Hospital for Sick Children, University of Toronto, Toronto, Canada.
69. Dr. Jack Santa-Barbara, Associate, Center for Peace Studies, McMaster University, Hamilton, Ontario, Canada.
70. Dr. Jasmin Habib, Postdoctoral Research & Teaching Fellow, Department of Anthropology, McMaster University, Hamilton, Ontario, Canada.
71. Dr. Joanna Santa Barbara, Center for Peace Studies, McMaster University, Hamilton, Ontario, Canada.
72. Dr. K.M.Wilson-Yang, Research Co-ordinator, Department of Anesthesia, McMaster University, Hamilton, Ontario, Canada
73. Dr. Len Lothstein, University of Tennessee Health Science Center, Memphis, TN, USA.
74. Dr. Louis Bickford, Senior Associate, International Center for Transitional Justice, New York, UK.
75. Dr. Mary-Beth Raddon, Department of Sociology, University of Toronto, Canada.
76. Dr. Daniela Dohmes-Ockenfels, Judge, Braunschweig, Germany.
77. Dr. Michael Polanyi, University of Toronto, Toronto, Canada.
78. Dr. Mohamed M. Arafa, Georgia DOT, Georgia, USA.
79. Dr. Pablo Policzer, Institute for International Relations, University of British Columbia, Canada.
80. Dr. Paul Younger, Professor Emeritus, McMaster University, Hamilton, Ontario, Canada.
81. Dr. R. Rajmohan, Independent scholar, Toronto, Canada
82. Dr. Ram Manikkalingam, Research Fellow, Open Society Institute, USA.
83. Dr. Robert Chase MD, Dept of Community Health Sciences, University of Manitoba, Winnipeg, Canada.
84. Dr. Robin Lucy, McMaster University, Hamilton, Ontario, Canada.
85. Dr. Ron McDonald, Pastoral Counselor, Church Health Center, Memphis, Tennessee, USA.
86. Dr. Seddiq Weera, Director, Afghanistan Peace Program, Center for Peace Studies, McMaster University, Hamilton, Ontario, Canada.
87. Lalith Lankatilleke, United Nations Human Settlements Programme, New York, USA
88. Lisa Kois, Independent Scholar, New York, NY, USA.
89. Mangalika de Silva, Amsterdam School for Social Science Research, University of Amsterdam, The Netherlands.

90. Harriet Woodside, Occupational Therapist, Hamilton Health Sciences, Hamilton, Ontario, Canada.
91. Peter Rosenblum, Director Human Rights Program, Harvard Law School, Cambridge, MA, USA.
92. Prof. Alice Fothergill, University of Akron, Akron, Ohio, USA.
93. Prof. Andrew Muller, McMaster University, Hamilton, Ontario, Canada.
94. Prof. Anne Warner La Forest, University of New Brunswick, Canada..
95. Prof. Chris Rodrigo, George Mason University, USA.
96. Prof. Corinne Dempsey, Assistant Professor of Religious Studies, University of Wisconsin, Stevens Point, USA
97. Prof. David Germano, University of Virginia, USA.
98. Prof. David Kennedy, Harvard Law School, Cambridge, MA., USA.
99. Prof. Dell Hymes, Commonwealth Professor of Anthropology (emeritus), University of Virginia, USA.
100. Prof. Dennis B. McGilvray, University of Colorado at Boulder, USA.
101. Prof. Donald Wells, McMaster University, Hamilton, Canada.
102. Prof. Duncan Kennedy, Harvard Law School, Cambridge, MA., USA.
103. Prof. Frederick H. Damon, University of Virginia, USA.
104. Prof. George Sorger, Biology, McMaster University, Hamilton, Ontario, Canada.
105. Prof. H.M.R. Meier, Senior Fellow, Massey College, University of Toronto, Toronto, Canada.
106. Prof. Harvey A. Feit, FRSC, Anthropology, McMaster University, Hamilton, Ontario, Canada.
107. Prof. Jeanne Marecek, Department of Psychology, Swarthmore College, USA.
108. Prof. Jerry Frug, Harvard Law School, Cambridge, MA., USA.
109. Prof. Kerry Rittich, Faculty of Law, University of Toronto, Canada.
110. Prof. Marc Howard Ross, William Rand Kenan, Jr. Professor, Department of Political Science, Bryn Mawr College, Bryn Mawr, Pennsylvania, USA
111. Prof. Mark Vorobej , Department of Philosophy, McMaster University, Hamilton, Ontario, Canada.
112. Prof. Martha Minow, Harvard Law School, USA.
113. Prof. Michele R. Gamburd, Portland State University, USA.
114. Prof. Nancy Howell, Department of Sociology, University of Toronto, Toronto, Canada.
115. Prof. Obiora Chinedu Okafor, Osgoode Hall Law School, York University, Toronto, Canada.
116. Prof. Patricia E. Perkins, Faculty of Environmental Studies, York University, Toronto, Canada.
117. Prof. Robert Wai, Osgoode Hall Law School, York University, Canada.
118. Prof. Sanjay Reddy, Barnard College, USA.
119. Prof. Tayyab Mahmud, Cleveland-Marshall College of Law, USA.
120. Rev. Dev Anandarajan, Uniting Church in Australia, Victoria, Australia.
121. Rev. Cathy Hird, St. Andrew’s United Church, Ripley, Ontario, Canada.
122. Vikram Singh, Columbia University, USA.
123. Wayne Lewchuk, Director, Labor Studies Program, McMaster University, Hamilton, Ontario, Canada.

124. Dr.Marlyn Tadros, Visiting Fellow, Northeastern University, Boston, MA, USA.
125. Prof. Kofi Quashigah, Faculty of Law, University of Ghana, Legon, Accra, Ghana.
126. Lareef Zubair, Columbia University, New York, USA.
127. Janice Vanderhaar, Board member, M.K. Gandhi Institute, Christian Brothers University, Memphis, TN, USA
128. Gerard Vanderhaar, Professor Emeritus, Christian Brothers University and Board Member of Mid-South Peace and Justice Center, Memphis, TN, USA.
129. Eudene Luther, Learning Resource Teacher: Hamilton, Wentworth District School Board, Canada.
130. Lara Olson, Project Coordinator, Reflecting on Peace Practice Project The Collaborative for Development Action, Inc. Cambridge, Massachusetts, USA, Liu Centre, University of British Colombia, Canada.
131. Mr Graham Tupper, Executive Director, Australian, Council for Overseas Aid (ACFOA), Private Bag 3,Deakin ACT 2600, Australia.
132. Prof. Harriet Friedmann, Munk Centre for International Studies, 1 Devonshire Place, Toronto, Ontario, Canada.
133. Dr. Anne Goodman, Centre for Peace Studies, McMaster University, Hamilton, ON, Canada.
134. Susan Wortman, Psychotherapist, Private Practice, Hamilton, Ontario, Canada.